காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR EXTREMED DOCTORS
Dr M. Rajkumar 96410 25996
Dr K. Namitha Bhanumati 9444 288788
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 166443

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 27 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 138

டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சார்பாக அரசியலமைப்பு தினக் கொண்டாட்டம்



சென்னை – 27 நவம்பர், 2026 மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை, தில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் அரசியலமைப்பு தினத்தைக் கொண்டாடியது. 'அரசியலமைப்பு @77: டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் அரசியலமைப்பு தொலைநோக்குப் பார்வையும் இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலமும்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சரும், டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையின் தலைவருமான டாக்டர் வீரேந்திர குமார், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இணையமைச்சர்கள் ராம்தாஸ் அத்வாலே, பி.எல். வர்மா, அமைச்சகத்தின் செயலாளர் சுதான்ஷ் பந்த் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் இதில் பங்கேற்றனர்.

விழாவில் பேசிய மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், சமூக நீதி, சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் கொள்கைகள் இன்றும் தொடர்ந்து வழிகாட்டுவதாகத் தெரிவித்தார். மேலும், சமத்துவம் நிறைந்த, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டமைப்பதில் அரசியலமைப்பு மாண்புகளைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின்போது முன்னாள் இந்திய தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலித் தலைமையில் இந்திய அரசியலமைப்பின் முகப்புரை வாசிக்கப்பட்டதுடன், ' அரசியலமைப்பு சார்ந்த நிர்வாகமும், டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் மரபும்' என்ற தலைப்பில் அவர் சிறப்புரை வழங்கினார்.